கூட்ட எண்.14

செங்கல்பட்டு நகராட்சி
நாள்.13.03.2024

குறள் : அன்புஉடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்துஅவாம்
பண்புஉடைமை தூதுஉரைப்பான் பண்பு.

தெளிவுரை: தன் நாட்டின் மீது அன்பும், உயர்ந்த குடிப்பிறப்பும், வேந்தன் விரும்புகின்ற உயர்ந்த பண்புகள் அமைதலும், தூது உரைப்பவனுக்கு வேண்டிய பண்புகள்.

# அவசரக்கூட்டம்

**2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி (14.03.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் அவசரக்கூட்டம் நகரமன்ற தலைவர்திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

13/03/24
நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்–1**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சிக்கு சொந்தமான பழவேலி தலைமை நீரேற்று நிலையத்தில் மிக்ஜாம் புயலின் காரணமாக பெய்த மழையில் 04.12.2023 அன்று இரவு பாலாற்றில் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாலாற்று படுகையில் உள்ள கிணற்றில் உள்ள மோட்டாரின் HDPE பைப் மற்றும் 50 sq mm UG Alumminium Cable கள் தண்ணீரில் அடித்து செல்லப்பட்டது. தண்ணீரில் அடித்து செல்லப்பட்டு கரை ஒதுங்கிய பைப்களை மீண்டும் பொருத்தவும், தேவைப்படும் புதிய HDPE பைப் மற்றும் 50 sqmm UG Alumminium Cable-கள் வாங்கி பொருத்தும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.13.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.398 நாள்.14.03.2024**
அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–2**

**பொறியியல் பிரிவு–** செங்கல்பட்டு நகராட்சியில் ஆட்கள் பற்றாக்குறையின் காரணமாக வெளிகொணர்வு முறையில் 4 தட்டச்சர் மற்றும் 3 தொழில்நுட்ப பணியாளர்கள் அமர்த்தி பணியினை மேற்கொள்ள நகர்மன்ற அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நகர்மன்ற தீர்மான எண்.328, நாள்.29.12.2023ன் படி திரு.பகவான் ஆன் கோ ஒப்பந்ததாரர் மூலம் பணி உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணியின் ஒப்பந்த காலம் பிப்ரவரி – 2024 முடிவடைகிறது. தற்போது நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்பு வரும் நிலையில் ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாத காரணத்தினால் ஏற்கெனவே பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் மதிப்பீட்டு தொகை ரூ.7.00 இலட்சத்தில் 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. நிர்வாக நலன் கருதி கூடுதலாக தட்டச்சர் ஒருவரை ஒப்பந்த விலை விகிதத்தில் பணி அமர்த்திக்கொள்ள அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.159/2023/இ1**

**தீர்மான எண்.399 நாள்.14.03.2024**
அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதி அளிக்கப்பட்டது.

**பொருள் எண்–3**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 15வது மத்திய நிதிக்குழு மான்யம் (Tied Grant and Untied Grant – 2022-2024)ன் படி கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அப்பணிக்கு 23.02.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட கல்வாரி மலை நீர்தேக்க தொட்டியில் இருந்து வடமலை பள்ளி அருகே உள்ள தரைமட்ட நீர்தேக்க தொட்டிக்கான பம்பு அறை, பைப் லைன், வால்வுகள், சுற்றுசுவர் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளும் பணி. | ரூ.30.55 | திருவாளர். MSD Construction | மதிப்பீட்டு விலை விகிதம் |
| | | | திருவாளர். S.செந்தில்வேல் | 0.30% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.25ல் அண்ணாநகர் முதல் பிரதான சாலையின் முதல் குறுக்கு தெரு 1வது தெரு சந்திப்பு முதல் 3வது தெரு சந்திப்பு வரை தடுப்பு சுவர் அமைக்கும் பணி. | ரூ.21.23 | திருவாளர். K.வெங்கடேசலு | –0.07% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | –3.66% மதிப்பீட்டை விட அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு–**

மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.145/2023/இ1**

**தீர்மான எண்.400 நாள்.14.03.2024**

மன்றம் பதிவு செய்யப்பட்டது.

14/03/24

நகரமன்ற தலைவர்

செங்கல்பட்டு நகராட்சி

கூட்ட எண்.15 செங்கல்பட்டு நகராட்சி

நாள்.14.03.2024

# <u>அவசரக்கூட்டம்</u>

**2024–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் தேதி (14.03.2024) வியாழக்கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு செங்கல்பட்டு நகராட்சி வேதாசலம் கட்டிடத்தில் அவசரக்கூட்டம் நகரமன்ற தலைவர்திருமதி.தேன்மொழி நரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெறும். அது சமயம் துணைதலைவர் மற்றும் நகரமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

நகரமன்ற தலைவர்
செங்கல்பட்டு நகராட்சி

**பொருள் எண்–1**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் <u>குடிநீர் நிதி (ம) பொது நிதி 2023–2024</u>ன் படி கீழ்கண்ட பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. அப்பணிக்கு 12.03.2024 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03ல் அண்ணாசாலை பகுதிக்கு புதியதாக 2 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்து தண்ணீர் தொட்டி அமைக்கும் பணி. | ரூ.8.00/– இலட்சம் | M/s. Appollo Enterprises | –2.35% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | M/s. Anand Enterprises | 0.35% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.07ல் பச்சையம்மன் கோவில் | ரூ.8.00/– இலட்சம் | M/s. Appollo Enterprises | –2.35% மதிப்பீட்டைவிட |

| | | | | |
|---|---|---|---|---|
| | தெரு மற்றும் அம்பேத்கர் தெரு பகுதிக்கு புதியதாக 2 எண்ணிக்கை ஆழ்துளை குழாய் கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி தண்ணீர் தொட்டி அமைக்கும் பணி. | | | குறைவு |
| | | | M/s. Anand Enterprises | 0.24% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.06ல் பெரிய ரத்தினம் செட்டித்தெரு சாலை பகுதியில் தேர் ஓட்டம் நிகழ்ச்சி நடைபெற உள்ளதால் பழுதடைந்த சிமெண்ட் சாலையினை சீரமைக்கும் பணி. | ரூ.6.00/– இலட்சம் | திருவாளர். K.வெங்கடேசலு | –0.15% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | 0.27% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 4 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17ல் பெரிய மணியக்கார தெருவில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் பழுதடைந்த குழாய்கள் மற்றும் வால்வுகள் மாற்றி அமைக்கும் பணி. | ரூ.2.00/– இலட்சம் | திருவாளர். C.வீரபாண்டியன் | –0.06% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | திருவாளர். S.செந்தில்வேல் | 16.13% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 5 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 11ல் வேதப்பர் தெருவில் அடங்கிய பழைய ரேஷன் கடை வீதியில் இருபுறமும் கால்வாய் அமைக்கும் பணி. | ரூ.8.00/– இலட்சம் | திருவாளர். N.கங்காதரன் | –0.14% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | M/s.Vimala Bhai Construction | 0.46% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 6 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் கலைஞர் கருணாநிதி தெரு 6வது தெருவில் உள்ள (வடுகர் தெரு) உள்ள கால்வாயும், சாலையும் புதுப்பிக்கும் பணி. | ரூ.7.00/– இலட்சம் | திருவாளர். S.செந்தில்வேல் | –0.02% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | | |
| | | | M/s. MSD Construction | 0.03% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 7 | செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.18ல் இலுப்பை தோப்பு பகுதியில் சாலை மற்றும் வடிகால்வாய் அமைக்கும் பணி. | ரூ.8.50/– இலட்சம் | திருவாளர். K.வெங்கடேசலு | –0.06% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | திருவாளர். G.ராஜேஷ் | 0.07% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 8 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2ல் தாழம்பூ தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் கல்வெட்டு அமைக்கும் பணி. | ரூ.9.98/– இலட்சம் | M/s. MSD Construction | –0.12% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | | திருவாளர். | 0.09% |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | S.செந்தில்வேல் | மதிப்பீட்டைவிட அதிகம் |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்பந்தப்புள்ளி குறைவாக வழங்கிய ஒப்பந்ததாரர்க்கு பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண்.401 நாள்.14.03.2024**

அலுவலக குறிப்பு அனுமதி அளிக்கப்பட்டது.

14/03/24

நகரமன்ற தலைவர்

செங்கல்பட்டு நகராட்சி